8th November 1966]

Government. However, the Government of India have been addressed separately to frame suitable rules under the Drugs and Cosmetics Act to regulate the manufacture, sale and distribution of Madhugasam. Their decision is awaited.

(அ) & (இ) ''மதுகாசம்'' என்னும் ஆயுர்வேத மருந்து பொது மக்களுக்கு விற்பனை செய்யப் படுவதைத் தடை செய்வது குறித்து சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரின் யோசனையைக் கேட்பதென்றும், பின்னர் அவசியமானால் அந்த மருந்து பொதுமக்களுக்கு விற்கப்படுவதைத் தடை செய்யுமாறு அரசாங்கத்தை வேண்டிக்கொள்வதென்றும் தென்கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றம், 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ந் தேதி நடைபெற்ற தனது கூட்டத்தில் தீர்மானித்தது. அதன்படி, தென் ஆற்காடு மாவட்டக் கலெக்டரால் சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வரிடம் அது குறித்து ஆலோசனை கேட்கப்பட்டது. கல்லூரி முதல்வரால் இவ் விஷயம் 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7-ந் தேதி நடைபெற்ற சென்னை நாட்டு மருத்துவ மத்தியக் கழகக் கூட்டத்தில் முன்பாக ஆலோசனைக்கு வைக்கப்பட்டது. ஆயுர்வேத முறையில், ''அசவாஷ்டம்'', ''அரிஷ்டம்'' என்னும் பெயர்களில் தயாரிக்கப்பட்டு வரும் மருந்துகளை, பதிவு பெற்ற நாட்டு மருத்துவரின் மருந்துக் குறிப்புச் சீட்டின் பேரில், உரிமம் பெற்ற மருந்துக் கடைகளில் விற்பனை செய்யப்படுவதைத் தவிர மற்றப்படி எவ்வகையில் விற்கப்பட்டாலும் அவற்றைத் தடை செய்யத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வேண்டிக் கொள்வதென மேற்படி மருத்துவக் கழகம் தீர்மானித்தது. இதுவரை அத்தீர்மானம் அரசாங்கத்திற்கு அனுப்பப்படவில்லை. ஆயினும், ''மதுகாசம்'' என்னும் மருந்தைத் தயாரிப்பது, விற்பனை செய்வது, வழங்குவது ஆகியவற்றை முறைப்படுத்தும் பொருட்டு மருந்துச்சரக்குகள்-ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின்கீழ் தக்க விதிகள் இயற்றுமாறு இந்திய அரசுக்குத் தனியே கடிதம் எழுதப்பட்டுள்ளது. இது குறித்து, மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

APPENDIX X.

[*Vide* answer to Starred Question No. 526 at page 607.]

Number of sterilisation operations performed in 1964-65

	Name of District.	Number of Operations.
	(1)	(2)
1	North Arcot	2,485
2	South Arcot	1,994
3	Chingleput	190
4	Coimbatore	1,975
5	Kanyakumari	2,805
6	Madurai	4,240
7	The Nilgiris	791
8	Ramanathapuram	4,072
9	Salem	1,922
10	Thanjavur	5,525
11	Tiruchirappalli	1,323
12	Tirunelveli	645
13	Madras City	8,802
	Total	36,769

[8th November 1966

1964-65ம் ஆண்டில் செய்யப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை.

	மாவட்டத்தின் பெயர்.	அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை.
	(1)	(2)
1	வட ஆர்க்காடு	2,485
2	தென் ஆர்க்காடு	1,994
3	செங்கற்பட்டு	190
4	கோயம்புத்தூர்	1,975
5	கன்னியாகுமரி	2,805
6	மதுரை	4,240
7	நீலகிரி	791
8	இராமநாதபுரம்	4,072
9	சேலம்	1,922
10	தஞ்சாவூர்	5,525
11	திருச்சிராப்பள்ளி	1,323
12	திருநெல்வேலி	645
13	சென்னை நகரம்	8,802
	மொத்தம்	36,769

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS